# செயற்பாட்டு அறிக்கை

# 2018

## உணவு ஆணையாளர் திணைக்களம்


இல : *330*

யூனியன் இடம்

கொழும்பு *02*

தொலைபேசி : *011-2421211*

பெக்ஸ் : *011-2434291*

# முகவுரை

2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சின் கீழிருந்த உணவுத் திணைக்களம், 2018 மார்ச் 28 ஆந் திகதிய 2064/26 என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய கௌரவ ரணில் விக்ரமசிங்க அமைச்சரவை அமைச்சராகப் பதவி வகித்த மற்றும் கௌரவ கர்ச டி சில்வா இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்த தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் 2018 நவம்பர் மாதம் 05 ஆந் திகதிய 2096/17 என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, உணவுத் திணைக்களம், கௌரவ மகிந்த அமரவீர அமைச்சராகப் பதவி வகித்த விவசாயத் திணைக்களத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன். மீண்டும் 2018 திசம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2103/33 என்ற இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய உணவுத் திணைக்களம், கௌரவ பீ. ஹரிசன் அமைச்சர் பதவியினை வகிக்கும் விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வள அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சின் விடயப்பரப்பிற்குள் கொண்டுவரப்பட்டது. அதன் பிரகாரம் 2018 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் உணவுத் திணைக்களம், அவ்வமைச்சின் கீழ் தனது நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

அரிசிப் பாதுகாப்பு இருப்புக் களஞ்சியசாலைகளை முன்னெடுத்துச் செல்லுதல் திணைக்களப் பணிக்கூற்றின் பிரகாரம் முன்னணியான செயற்பாடாகும். அக்கையிருப்புக்களை முன்னெடுக்கும் பணியினை மிகவும் விளைத்திறனாக நிறைவேற்றுவதற்கு வெயங்கொட மாவட்டக் களஞ்சிய வளாகத்தில் காணப்பட்ட இரண்டு களஞ்சியசாலைகளின் பொறிசார் வளிமண்டலக் காற்றோட்டச் செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மாத்தறை - மாத்தவத்த, காலி - பூஸ்ஸ மற்றும் அனுராதபுரம் - சிராவஸ்திபுர

களஞ்சியசாலைகளின் பழுதுபார்க்கும் செயற்பாடுகளினையும் 2018 ஆண்டில் முன்னெடுப்பதற்கு முடிந்தமை வருடத்தின் செயற்திறனுக்கு ஒன்றுசேர்க்கப்பட்ட சிறப்பம்சத்துடன் விளங்கும் முன்னேற்றம்சார் செயற்பாடொன்றாகும்.

தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகள் அமைச்சிலிருந்து பெற்றுக் கொண்ட ஆலோசனைகளின் பிரகாரம், தம்புள்ள பொருளாதார நிலையத்திற்கு அருகாமையில் மரக்கறி மற்றும் பழங்களினைக் களஞ்சியப்படுத்துவதற்கு குளிரூட்டப்பட்ட கட்டிடத் தொகுதியொன்றினை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசுடன புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2018 செப்ரெம்பர் மாதம் 17 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. தற்போது 40 % மான அறுவடைக்குப் பின்னரான பாதிப்பினைக் குறைத்தல் இக்கருத்திட்டத்தின் நோக்கமாவதுடன், உணவு ஆணையாளர் திணைக்களத்தின் முழுமையான கண்காணிப்பின் கீழ் இக்கருத்திட்டத்தின் ஆரம்பப் பணிச் செயற்பாடுகள் இதுவரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியசாலைகளை வாடகைக்கு வழங்குதல் மற்றும் திணைக்களத்திற்கு உரித்தான தான்யகம இல்லங்களை அப்பிரதேசத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள அரச ஊழியகர்களுக்கு குறைவான வாடகையொன்றின் கீழ் வழங்குவதனூடாக ரூபா. 5,889,756.72 வருடாந்த வருமானமொன்றினை அரசின் வருமானத்திற்கு வரவிடுவதற்கு முடிந்துள்ளதுடன். நிலுவை வாடகைப் பணத்தினை அறவீடு செய்வதற்கு முன்னுரிமையினை வழங்கிச் செயற்படுதல் அம்முன்னேற்றத்தினைச் சுவீகரித்துக் கொள்ளுவதற்கு காரணகர்த்தாவாகியுள்ளது.

தான்யகம இல்லத் தொடரில் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள இல்லங்களினுள், அவர்களின் குடும்பத்தினரால் இடைக்கால தீர்வைகளாக வழங்கப்பட்டிருந்த இல்லங்களை அடையாளங் காண்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான இல்லங்களின்

குடியிருப்பாளர்களினை அகற்றுவதற்கும் நிலுவை வாடகைகளை அறவீடு செய்வதற்கும் சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதுடன், அப்பிரச்சினைகளில் அதிகமான பகுதிகளைத் தீர்ப்பதற்கு முடிந்தமை வருடத்தினுள் பெற்றுக் கொண்ட முன்னேற்றத்திற்கு பேருதவியாக அமைந்துள்ளது.

இவ்வனைத்து இலக்குகளை நிறைவேற்றுவதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் அங்கீகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த கௌரவ அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் பதவியணியினரினையும் மற்றும் பாரிய அர்ப்பணிப்பு மற்றும் அக்கறையுடன் செயற்பட்ட திணைக்களத்தின் சகல பதவியணியினரினையும் நினைவுகூருவதற்கு இம் முகவுரை அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அச்சகல பகுதியினருக்கும் இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு எதிர்வரும் வருடத்தினுள் புதிய பாதையில் திணைக்களத்தின் பணிக்கூற்றினை விரிவுபடுத்துவதற்கு வாய்ப்புக் கிட்ட வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாக உள்ளது.



**ஜெ. கிருஷ்ணமூர்த்தி,**
உணவு ஆணையாளர்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
2019 பெப்ரவரி மாதம் 27 ஆந் திகதி.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | உணவு ஆணையாளர் திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று | 38 |
| 2. | உணவு ஆணையாளர் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் | 39-40 |
| 3. | அமைப்புக் கட்டமைப்பு | 41 |
| 4. | நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் பதவியணியினர் | 42-48 |
| 5. | கணக்காய்வு மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 48-49 |
| 6. | சட்ட நடவடிக்கைகள் | 49-52 |
| 7. | திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியசாலைகள் மற்றும் இல்லங்கள் | 53-64 |
| 8. | கணக்குச் செயற்பாடு தொடர்பிலான மீளாய்வு | 65-66 |
| 9. | சொத்துக்கள் மற்றும் ஆதனம் | 67 |
| 10. | வருவாய்கள் மற்றும் அறவீடுகள் | 68 |
| 11. | நிதி அறிக்கைகள் | 69-71 |
| 12. | செயற்பாடு மற்றும் முன்னேற்றம் | 72 |

## (01) உணவு ஆணையாளர் திணைக்களத்தின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று

### தொலைநோக்கு

**“ஒவ்வொரு வீட்டிலும் பாதுகாப்பான, சீரான, சத்தான தானிய உணவுகள்”**

### பணிக்கூற்று

“தானிய உணவுப் பொருட்களின் சந்தை வாய்ப்பு, நுகர்வோர்களுக்குக் கிடைக்கக் கூடிய வசதி மற்றும் நுகர்வோர் கொள்வனவு செய்யும் இயலுமையினைப் பாதுகாப்பதற்கு உணவு ஆணையாளர் திணைக்களம் மற்றும் தொடர்புடைய பங்குதாரர்கள், திணைக்களத்திற்கு உரித்தான சொத்துக்கள் மற்றும் விளைத்திறனுடனான அர்ப்பணிப்பினைக் கொண்ட பணியாளர் குழுக்களுடன் சிறந்தவாறு ஒருங்கிணைப்புச் செய்வதனூடாக உணவு ஆணையாளர் திணைக்களத்தின் தொலைநோக்கினை அடையப் பெறுதல்.”

# (02) உணவு ஆணையாளர் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்.

1. தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் (SAARC) கொழும்பு சாசனம் மற்றும் 16 வது மகாநாடு கூட்டத்தின் பிரகாரம் 8000 மெ.தொ. விசேட அரிசி இருப்பொன்றினை முன்னெடுத்துச் செல்லுதல்.

   தெற்காசியப் பிராந்திய நாடுகளின் அவசர மற்றும் அநர்த்த வேளைகளில் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடியவாறு 8000 மெ.தொ. அரிசி இருப்பொன்றினை, இலங்கையினால் முன்னெடுக்கப்படுதல் வேண்டும் என அதன் அமைப்பின் 16 வது மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

2. 2008/8/27 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நாடுபூராவுமுள்ள உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியசாலைகளில் 100,000 மெ.தொ. பாதுகாப்பான அரிசி இருப்பொன்றினை முன்னெடுத்துச் செல்லுதல்.

3. 2008/8/27 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நெருக்கடியான சூழ்நிலைகளில் பாவனைக்கு எடுப்பதற்கென 100,000 மெ.தொ. பாதுகாப்பான அரிசி இருப்பொன்றினை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் உணவுத் திணைக்களம் மீளமைக்கப்பட்டுள்ளது.

4. சந்தையில் அரிசி கிடைப்பதை உறுதிப்படுத்துதல்.
   சந்தையில் அரிசிப் பற்றாக்குறை ஏற்படுவதனூடாக ஏற்படக்கூடிய விலையேற்றங்கள் தொடர்பில் அத்தியாவசியமான வேளைகளில் சந்தைக்கு இருப்புக்களை விடுவித்து அரிசியினைக் கொள்வனவு செய்யும் இயலுமையினை வாடிக்கையாளருக்கு வழங்குதல்.


5. **நிறுவனத்தின் வளங்களை சிறந்தவாறு முகாமை செய்வதற்கு உரிய பங்குதாரர்களுடன் (Stake holders) சிறந்த ஒருங்கிணைப்புடன் செயற்படுதல்.**
   திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியசாலைகள் மற்றும் இல்லங்களை சிறந்த பயன்பாட்டிற்கு உட்படுத்துதல் தொடர்பில் மேலதிக களஞ்சியசாலைகள் மற்றும் இல்லங்களை பிரதான விலை

மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வாடகைக்கு வழங்கி அரச வருவாய்க்கு பங்களிப்பொன்றினை வழங்குதல்.

**6. பூச்சி புளுக்களற்ற தானியம்சார் உணவுக் களஞ்சியங்களின் சூழலொன்றினை உருவாக்குதல்.**

உயர் தரத்துடனான உணவுப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு பூச்சி புளுக்களின் ஆபத்தில்லாத களஞ்சியசாலைகளினை முன்னெடுத்துச் செல்லுவதனூடாக நுகர்வோருக்கு தரத்துடன்கூடிய உயர்ரக தானியம்சார் உணவினை வழங்குதல்.

# (03) அமைப்புக் கட்டமைப்பு



## (04) நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் பதவியணியினர்

உணவு ஆணையாளரினால் அமுலாக்கப்பட்ட நிர்வாக மற்றும் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் செயலூக்கமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2018 ஆம் ஆண்டு தொடர்பில் திணைக்களத்தின் சகல கணக்குச் செயற்பாடுகள், பிரதான கணக்காளர் மற்றும் கணக்காளரினால் இடம்பெற்று வருகின்றது.

366 திருகோணமலை இல்லங்களை முகாமை செய்வதற்கு திருகோணமலை நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். வெயங்கொட மாவட்ட தானியக் களஞ்சியத்தினை முகாமை செய்வதற்கு வெயங்கொட நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

திணைக்களத்தின் சட்டப் பிரிவு, கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சட்ட ஆலோசகரின் பதில் கடமையின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 82 தொடர்பில் I,II,III வகுப்புக்களுக்கு உரித்தான 24 உத்தியோகத்தர்களும், பல்வேறான பதவிகளுக்கு உரித்தான அங்கீகரிக்கப்பட்ட திணைக்களம்சார் ஊழியர் பதவிகள் 83 தொடர்பில் 50 ஊழியர்களையும் உள்ளடக்கி மொத்த அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரான 227 தொடர்பில் 2018.12.31 ஆந் திகதியன்று 101 பதவியணியினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2018.01.01 ஆந் திகதியன்று கடமையிலிருந்த மொத்த ஊழியர்களில் 2% வருடத்தின்போது ஓய்வு பெற்றுள்ளனர்.

நீண்டகாலமாகவே திணைக்களத்தின் பதவியணியினரில் வெற்றிடம் நிலவும் தானிய ஆய்வாளர் பதவிக்கு 2018 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர் ஒருவர்

ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவினால் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் செயற்பாடுகள், பதவி உயர்வுச் செயற்பாடுகள் மற்றும் பயிற்சியளிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்களைப் பயிற்சியளித்தல் பின்வருமாறாகும்.

| உத்தியோகத்தரின் பெயர் | கலந்துகொண்ட பயிற்சிப் பாடநெறி மற்றும் நிறுவனம் | செலவு செய்யப்பட்ட நிதி (ரூ) |
|---|---|---|
| பீ.ஏ.டீ.எம்.பீ. பனன்வல<br>ஜெ,ரீ.எம்.என். பிரசாத்<br>ரீ.எம்.ஆர்.கே.தென்னக்கோன் | அலுவலகப் பணியாளரின் கடமை தொடர்பிலான பயிற்சி, தேசிய ஊழியர் கற்கை நிறுவனம். | 18000.00 |
| டீ.அய். அறோசி | ஒழுக்காற்று நடவடிக்கைகள், மிலோதா நிறுவனம். | 13000.00 |
| ஆர்.பி.என் தில்றுக்சி<br>கே.பீ. தனுஸ்கா<br>என்.டீ.ஏ. ஜீ. சோமதுங்க<br>எம்.ஏ.மிதிலா | அரச நிதிப் பிரமாணம் மிலோதா நிறுவனம் | 72000.00 |
| எம்.கே.டபிள்யு. கிமாலி<br>எம்.அய். காய்ரா | அலுவலக முகாமைத்துவம் தொடர்பிலான திறன் விருத்தி, தேசிய ஊழியர் கற்கை நிறுவனம். | 20000.00 |
| எச்.டீ.ஏ.ஜீ. சோமதுங்க | சம்பளங்களைத் தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டம், மிலோதா நிறுவனம். | 18000.00 |
| கே.ஏ.எஸ்.எம் ஆரியசிங்க | அறிக்கைகள் எழுதும் ஆற்றல்கள் | 26000.00 |

| | | |
|---|---|---|
| ஆர்.எம்.எஸ். ரத்னாயக்க | மிலோதா நிறுவனம் | |
| ஈ.பி.டீ.ஐ. மகிந்த<br>யு.எஸ். மதுரங்க<br>பீ.டீ.எஸ்.எஸ். ராஜபக்ச<br>ஆர்.எம்.எஸ். ரத்னாயக்க<br>எல்.ஆர்.என்.சீ. ரணசிங்க<br>எம்.ஜெ.ஜி. லியனகே | முகாமைத்துவ உதவியாளர்களுக்கான தகவல் தொழில்நுட்பம், மிலோதா நிறுவனம். | 78000.00 |
| யு.எஸ். மதுரங்க<br>டீ.டீ.எஸ்.புஸ்பகுமார | ஒழுக்காற்று நடவடிக்கைகள், மிலோதா நிறுவனம். | 26000.00 |
| ரீ.எம்.ஆர்.கே. தென்னக்கோன் | வரவேற்பு உத்தியோகத்தர்கள் மற்றும் தொலைபேசி இயக்குனர்களின் திறன் விருத்தி, தேசிய ஊழியர் கற்கை நிறுவனம். | 6000.00 |

| **உத்தியோகத்தரின் பெயர்** | **கலந்துகொண்ட பயிற்சிப் பாடநெறி மற்றும் நிறுவனம்** | **செலவு செய்யப்பட்ட நிதி (ரூ)** |
|---|---|---|
| ஜி.ஜி. அரவிந்த | களஞ்சியப்படுத்துதல் தொடர்பிலான சான்றிதழ்ப் பாடநெறி, நிர்மாண பொறித்தொகுதிப் பயிற்சி நிலையம். | 15000.00 |
| எம்.டீ. பிரியதர்சனி | பிரத்தியேகக் கோவைகளினை முகாமை செய்தல், மிலோதா நிறுவனம். | 13000.00 |
| எம்.ஜெ.ஜி. லியனகே | அரச கணக்காய்வு மூலோபாயங்கள், மிலோதா நிறுவனம். | 18000.00 |
| | கனிஸ்ட நிறைவேற்று | |

| | | |
|---|---|---|
| ஆர்.எம்.எஸ். ரத்னாயக்க | உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில டிப்ளோமாப் பாடநெறி, மிலோதா நிறுவனம். | 60000.00 |
| எல்.டபிள்யு.எம். சுபாசினி | அறிக்கைகள் எழுதுதல் தொடர்பிலான அடிப்படை அறிவு, மிலோதா நிறுவனம். | 16500.00 |
| எம்.எல். சக்கரியா<br>எம்.ஜெ.ஜீ. லியனகே<br>யு.எஸ். மதுரங்க<br>டீ.டீ.எஸ். புஸ்பகுமார<br>சீ.கே. களுஆரச்சி | ஆவணங்களை முகாமை செய்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான பாடநெறி, தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம். | இலவசமாக நடாத்தப்பட்டது. |

## 2018 உணவு ஆணையாளர் திணைக்களத்தின் பதவியணியினர்

| தொ. இல. | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | 2018.12.31 ஆந் திகதி வரையில் கடமையிலுள்ளோர் |
|---|---|---|---|
| 01 | உணவு ஆணையாளர் | 01 | 01 |
| 02 | பிரதான கணக்காளர் | 01 | 01 |
| 03 | பிரதி உணவு ஆணையாளர்/உதவி உணவு ஆணையாளர் | 02 | 01 |
| 04 | கணக்காளர் | 02 | 01 |
| 05 | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | - |
| 06 | மொழிபெயர்ப்பாளர் | 01 | - |
| 06 | தரக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் | 01 | 01 |
| 07 | தானியப் பரிசோதகர் | 01 | 01 |
| 08 | பணிப் பரிசோதகர் | 02 | 01 |
| 09 | தகவல் மற்றும் தொடர்பாடல் உதவியாளர் | 01 | 01 |
| 10 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 82 | 24 |
| 11 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 22 | 10 |
| 12 | Wharf வெளிக்களச் சேவை | 08 | 08 |
| 13 | சாரதி | 10 | 07 |
| 14 | அலுவலகப் பணியாளர் | 22 | 08 |
| 15 | Fumigator | 26 | 08 |
| 16 | சாரதி உதவியாளர் | 02 | 08 |
| 17 | Wharf வெளிக்கள ஊழியர் | 01 | 01 |
| 18 | காவலாளி | 17 | 17 |

| | | | |
|---|---|---|---|
| 19 | களஞ்சிய ஊழியர் | 24 | 02** |
| | **மொத்தம்** | **227** | **101** |

** களஞ்சிய ஊழியர் பதவிகள் தொடர்பில் பதிலீட்டு அடிப்படையின் கீழும் மற்றும் அமைய அடிப்படையின் கீழும் ஒவ்வொரு ஊழியர் என்றவாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

1. **ஓய்வு பெற்றவர்கள்**

| | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 02 | அலுவலகப் பணியாளர் | 01 |

2. **இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள்.**

| | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 |

3. **இடமாற்றம் பெற்று வந்தவர்கள்**

| | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |

4. **திணைக்களச் சேவையிலிருந்து விடுவித்தல்.**

| | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | சாரதி | 01 |

5. **புதிய ஆட்சேர்ப்பு**

| | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | தானியப் பரிசோதகர் | 01 |

**6. புதிய நியமனங்கள்**

| | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| 02 | சாரதி | 02 |

## (05) கணக்காய்வு மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்.

- **கணக்காய்வு**

கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு பதவியணியினரினைக் கொண்ட அரச கணக்காய்வு பிரிவொன்று திணைக்களத்தினுள் அமைக்கப்பட்டுள்ளது. அதனூடாக அவசியமானவேளைகளில் முன்னெடுக்கப்படும் கணக்காய்வுகளுக்கு மேலாக இறுதிக் கணக்குகளின் கணக்காய்வுச் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

கணக்காய்வாளர் அதிபதியினாலும் மற்றும் திணைக்களத்தின் வளாகத்தில் அமைந்துள்ள அரச கணக்காய்வுப் பிரிவிலிருந்தும் அனுப்பப்படும் கணக்காய்வு விசாரணைகளுக்கான மறுமொழிகளை உரிய பகுதியினருக்கு நேரடியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு 2018 திசம்பர் 31ஆந் திகதியளவில் 55 கணக்காய்வு விசாரணைகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அச்சகல கணக்காய்வு விசாரணைகள் தொடர்பிலுமான மறுமொழிகள் 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

2018 முதலாவது காலாண்டு மற்றும் நான்காவது காலாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படாதிருந்ததுடன், இரண்டாவது காலாண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம், தேசியக்

கொள்கைள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளரின் தலைமையிலும், மூன்றாவது காலாண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம், விவசாய அமைச்சின் செயலாளரின் தலைமையிலும் நடாத்தப்பட்டதுடன். அக்குழுவுக்கு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## (06) சட்ட நடவடிக்கைகள்

2018 ஆம் ஆண்டு நிறைவில் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்கள் பின்வருமாறாகும்.

| இலக்கம் | தன்மை | முன்னெடுக்கப்பட்டு வரும் வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | மேலதிகங்களை அறவீடு செயதல் | 01 |
| 02 | நிலுவை களஞ்சிய வாடகைகளை அறவீடு செய்தல். | 06 |
| 03 | தான்யகம வீடமைப்புத் தொடரின் இல்லங்களின் உரித்தினை மீளவும் பெற்றுக் கொள்ளுதல். | 42 |
| 04 | குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுக்கும் வழக்குகள். | 05 |

1. மேலதிகங்களை அறவீடு செய்யும் சட்ட நடவடிக்கைகளின் கீழ் திரு. ஏ.டபிள்யு. குணசேகர அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 847,349.43 நிதியினை அறவீடு செய்வதற்கு கண்டி மாவட்ட நீதிமன்றில்

தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு DMR/1046 என்ற இலக்கத்தின் கீழ் பரிட்சிக்கப்படுகின்றது.

2. மேலும் மேலதிகம் அறவீடு செய்யப்பட வேண்டிய எச்.எல்.எம் மென்டிஸ், வில்பட் போப்பகே, என.ஈ. பண்டித்தரத்ன மற்றும் ஓ. ஜகத்வீர போன்றோர்களிடமிருந்து மேலதிக நிதியினை அறவீடு செய்வதற்கு எந்தவொரு இயலுமையும் இல்லை என்பதால் அவர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய மேலதிக நிதியினை கைவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கணக்காளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

3. நிலுவைக் களஞ்சிய வாடகையினை அறவீடு செய்தலின் கீழ் பின்வருமாறு வழக்குச் செயற்பாடுகள் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

   - மல்கடுவாவ GI களஞ்சியத்துடன் தொடர்பிலான நிக்கவெரட்டிய கிரீன் வலி ப்ளான்டேஷன் (பிரத்தியேக) கம்பனிக்கு எதிராக ரூபா. 2,298,029.98 நிதியினை அறவீடு செய்வதற்கு தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் DMR/1830/2018 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் அமுற்படுத்தப்படுகின்றது.
   - உணவகம் தொடர்பில் திரு. ஜீ.ஏ. ரஞ்சித் குமார அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 816,032.42 நிதியினை அறவீடு செய்வதற்கு தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் DMR/2466/17 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் அமுற்படுத்தப்படுகின்றது.
   - வெயங்கொட இலக்கம் 04 களஞ்சியசாலை தொடர்பில் பண்டார இன்டஸ்றீஸ் சேர்விசஸ் (பிரத்தியேக) கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 1,153,008.00 நிதியினை அறவீடு செய்தல் DMR/355/2018 என்ற இலக்கத்தின் கீழ் வழக்கு அமுற்படுத்தப்படுகின்றது.

4. மேலும் நிலுவை வாடகையினை அறவீடு செய்தலின் கீழ் வழக்குத் தொடுப்பதாக அறிவித்து நீதியரசர் திணைக்களத்திற்கு அறிவித்துள்ள நிறுவனங்களின் தகவல்கள் பின்வருமாறு

   - கேகாலை பரகம்மன இலக்கங்கள் 1,2 மற்றும் 3 களஞ்சியசாலைகள் தொடர்பில் விஜித்த குரூப் வர்த்தகர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா. 541,017.60 நிதியினை அறவீடு செய்தல்.
   - வெயங்கொட இலக்கம் 02 களஞ்சியசாலை தொடர்பில் ஏபல் ஹோல்டிங்ஸ் (பிரத்தியேக) கம்பனியிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய நிதி தொடர்பானது.
   - மாத்தறை மெத்தவத்த, பதுளை மற்றும் நாராஹென்பிட்டி இலக்கம் 06 களஞ்சியசாலை தொடர்பில் வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்வோர் சங்கத்திடமிருந்து அறவிடப்பட்ட வேண்டிய நிதியினை அறவீடு செய்தல்.

5. தான்யகம வீடமைப்புத் தொடரின் 42 வீடுகளின் உரித்தினை மீளவும் எமது திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் வழக்கு ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் தேவையான சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு நீதியரசர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.
6. அரிசி வழங்கப்படாமை தொடர்பில் திரு. எச்.ஜி. ஆனந்தபால அவர்களுக்கு எதிராகவும் மற்றும் திரு. பி.ஜி. ரத்னாயக்க அவர்களுக்கு எதிராகவும் வழக்குகளைத் தொடுப்பதற்கு நீதியரசர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டது.
7. மியன்மார் அரிசி தொடர்பில் வரையறுக்கப்பட்ட்ட இலங்கை நுகர்வோர் சங்கம், எமது திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா. 1,942,300.00 நிதியிலிருந்து ரூபா. 500,000.00 நிதி எமக்கு

வழங்கப்பட்டுள்ளதுடன், மீதியான ரூபா. 1,442,300.00 நிதியினை அறவீடு செய்வதற்கு நீதியரசர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டது.

## (07) திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியசாலைகள் மற்றும் இல்லங்கள்.

- **திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியசாலைகள்**

உணவுத் திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியசாலைகள் 21 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளதுடன், எண்ணிக்கை ரீதியில் அது 120 ஆகும். அரச சொத்துக்களை சிறந்தவாறு முகாமை செய்யும் எண்ணத்தில் அச்சொத்துக்கள், பின்வரும் வகையில் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**2018/12/31 ஆந் திகதிய களஞ்சியசாலைகள் தொடர்பிலான தகவல்கள்**

| | **களஞ்சியசாலைகள்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | அரச மற்றும் பிரத்தியேக நிறுவனங்களுக்கு மாதாந்த வாடகையின் கீழ் வழங்கப்பட்டுள்ள களஞ்சியசாலைகள். | 48 |
| 2 | வாடகையில்லாது அரச துறை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள களஞ்சியசாலைகள். | 29 |
| 3 | உணவுத் திணைக்களம் பாவித்து வரும் களஞ்சியசாலைகள் | 21 |
| 4 | பிரதேச செயலாளர்/மாவட்ட செயலாளரின் பொறுப்பிலுள்ள களஞ்சியசாலைகள். | 20 |
| 5 | பாவனைக்குத் தகாத களஞ்சியசாலைகள் | 02 |
| | **மொத்தம்** | **120** |

2018 ஆம் ஆண்டில் உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு (15390 மெட்ரிக் தொன்) தேவையான 5 களஞ்சியசாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. அவையாவன.

1. அனுராதபுர சிறாவஸ்திபர களஞ்சியசாலைகள் 02
2. காலி புஸ்ஸ களஞ்சியசாலைகள் 02

3. மாத்தறை மெத்தவத்த களஞ்சியசாலை 01

2018/2019 பெரும்போகத்தில் எதிர்பார்க்கப்பட்ட உயர்ரக நெல் விளைச்சல்களினைப் பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான களஞ்சிய வசதிகளை வழங்கும் நோக்குடன் மேற்குறிப்பிட்ட களஞ்சியசாலைகளைப் புனரமைக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

2018.12.31 ஆந் திகதி வரையில் திணைக்களத்தின் பொறுப்பிலுள்ள, தற்போது வாடகையில்லாது அல்லது வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள களஞ்சியசாலைகள் தொடர்பிலான அறிக்கை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

1. **அரச மற்றும் பிரத்தியேக நிறுவனங்களுக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள களஞ்சியசாலைகள்.**

| தொ. இல் | களஞ்சியசாலையின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளளவு (மெ.தொ.) | களஞ்சியசாலையினை உபயோகிக்கும் நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01 | ஒறுகொடவத்த - 01 | 24624 | 6000 | றாங் கொன்ரெய்னர் ரேமினல்ஸ் (பிரத்தியேக கம்பனி) |
| 02 | ஒறுகொடவத்த - 03 | 20304 | 5000 | |
| 03 | ஒறுகொடவத்த - 05 | 19008 | 4500 | |
| 04 | ஒறுகொடவத்த - 06 | 5000 | 20304 | |
| 05 | ஒறுகொடவத்த - 12 | 18183 | 4000 | இலங்கைச் சுங்கம் |
| 06 | ஒறுகொடவத்த - 10 | 13436 | | றாங் கொன்ரெய்னர் ரேமினல்ஸ் (பிரத்தியேக கம்பனி) |
| 07 | ஒறுகொடவத்த - 14 | 11448 | | |
| 08 | ஒறுகொடவத்த - 15 | 18206 | | |
| 09 | ஒறுகொடவத்த - 16 | | | |
| 10 | அலுவலகக் கட்டிடம் | | | |
| 11 | ஒறுகொடவத்த - 09 | 16560 | 4000 | சத்தொச நிறுவனம் |
| 12 | ஒறுகொடவத்த - 02 | 6000 | 24624 | டெலி லங்கா கோல்டிங்ஸ் (பிரத்தியேக) கம்பனி |
| 13 | வெயங்கொட - 02 | 21750 | 4000 | ஏபல் கோல்டிங்ஸ் (பிரத்தியேக) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கம்பனி |
| 14 | வெயங்கொட - 04 | 7552 | 900 | பண்டார இன்டஸ்றியல் சேவிஸ் |
| 15 | வெயங்கொட - 11 | 33200 | 6200 | தொன் மியொன் நிறுவனம் |
| 16 | வெயங்கொட - 17 | 6279 | 770 | பொறியியல் பணிகள் தொடர்பிலான மத்திய ஆலோசனைப் பணியகம் |
| 17 | வெயங்கொட - 09 | 5400 | 28860 | ச.தோ.ச. நிறுவனம் |
| 18 | வெயங்கொட - 08 | 5400 | 28860 | |
| 19 | பிளெக்புல் -01 | 1514 | 280 | நுவரெலியா விவசாயக் கூட்டுறவுச் சங்கம் |
| 20 | பிளெக்புல் -02 | 1836 | 150 | |
| 21 | பிளெக்புல் -02 உயர் மாடி | 1824 | | |
| 22 | பிளெக்புல் -03 | 2335 | 435 | |
| 23 | பதுளை - 02 | 6781 | 1500 | மின்சார சபை |
| **தொ. இல்** | களஞ்சியசாலையின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளளவு (மெ.தொ.) | வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள நிறுவனம் |
| 24 | மல்கட்டுவாவ - 01 | 5227 | 2000 | செய்ட் மொகொமட் கம்பனி |
| 25 | மல்கட்டுவாவ - 02 | 4827 | 2000 | |
| 26 | ஓபநாயக்க - 02 | 5300 | 850 | மின்சார சபை |
| **27** | மல்கட்டுவாவ (GI) களஞ்சியசாலை | 10498 | 2000 | S.B.M. டிஸ்றிபியுட்டர்ஸ் |
| 28 | கட்டுகொட - 01 | 20545 | 3825 | றைக்கோ மெரிரைம் |
| 29 | கட்டுகொட - 02 | 9532 | 1775 | |
| 30 | வெலிகம | 8019 | 1300 | பியசிறி ஸ்ரோர்ஸ் |

| | | | | |
|---|---|---|---|---|
| | களஞ்சியசாலை | | | |
| 31 | சேனாநாயக்க - 01 | 2461 | 390 | வரையறுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைந்த விவசாயக் கம்பனி |
| 32 | சேனாநாயக்க - 04 | 2185 | 325 | வரையறுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைந்த விவசாயக் கம்பனி |
| 33 | ரத்மலான - 03 | 41200 | 7520 | லங்கா ச.தொ.ச |
| 34 | ககவத்தை - 01 | 3180 | 590 | வரையறுக்கப்பட்ட பன்னிலபற்று பல்நோக்கு சேவைகள் அமைப்பு. |
| 35 | ககவத்தை - 02 | 1881 | 150 | |
| 36 | அகெலியகொட - 01 | 2337 | 435 | வரையறுக்கப்பட்ட எகெலியகொட பல்நோக்கு சேவைகள் அமைப்பு. |
| 37 | அகெலியகொட - 02 | 2373 | 435 | |
| 38 | அகெலியகொட - 03 | 4806 | 900 | |
| 39 | ஹப்புத்தளை- 01 | 1653 | 130 | ஹப்புத்தளை பல்நோக்கு சேவைகள் அமைப்பு |
| 40 | ஹப்புத்தளை - 02 | 1806 | 120 | |
| 41 | இரத்தினபுரி களஞ்சியசாலை | 9611 | 1800 | வரையறுக்கப்பட்ட பம்பரபொட்டுவ பல்நோக்கு சேவைகள் அமைப்பு மற்றும் லங்கா சத்தொச. |
| **42** | கட்டுவான - 02 | 5544 | 2000 | ச.தோ.ச. நிறுவனம் |
| 43 | மாத்தளை- 01 | 21448 | 3000 | திரு. மொகொமட் அஸ்றவ் |
| 44 | கட்டுகஸ்தொட்ட களஞ்சியசாலை | 6490 | 1700 | றெண்டஸ் மார்க்கட்டின் |
| 45 | மட்டக்களப்பு - 01 | 18000 | 6000 | பிரன்டிக்ஸ் அப்பறல் நிறுவனம் |
| 46 | மட்டக்களப்பு - 02 | 17600 | 6000 | |
| 47 | மட்டக்களப்பு - 03 | 17600 | 6000 | |
| 48 | ககந்தாவ - புதிய | 7090 | 1900 | மியாமி நிறுவனம் |
| | **மொத்தம்** | **534077** | **106680** | |

**2. வாடகையில்லாது அரச துறையின் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள களஞ்சியசாலைகள்**

| தொ. இல் | களஞ்சியசாலையின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளளவு (மெ.தொ.) | வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01 | ஒறுகொடவத்த - 04 | 19008 | 5000 | தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு (WFP ) |
| 02 | ஒறுகொடவத்த - 07 | 20304 | 5000 | அநர்த்த முகாமைத்துவ அமைச்சு |
| 03 | வெயங்கொட - 12 | | | பொருளாதார நிலையம் |
| 04 | ரத்மலான - 04 | 19032 | 2580 | தொழிலாளர் திணைக்களம் |
| 05 | ரத்மலான - 05 | 21008 | 2900 | ச.தொ.ச. நிறுவனம் |
| 06 | ரத்மலான - 01 | 50350 | 8530 | பொருளாதார நிலையம் |
| 07 | வெலிசர | | | கிராமிய பொருளாதார அமைச்சு |
| 08 | வெள்ளவத்தை - 01 | 10266 | 2000 | சுகாதார திணைக்களம் |
| 09 | வெள்ளவத்தை - 02 | 10915 | 2000 | சுகாதார திணைக்களம் |
| 10 | வெள்ளவத்தை - 03 | 11100 | 2000 | சுகாதார திணைக்களம் |
| 11 | வெள்ளவத்தை - 04 | 11100 | 2000 | கடற்படையினர் |
| 12 | கட்டுவான - 01 | 6336 | 2000 | நெல் சந்தைப்படுத்தல் சபை/லக் சத்தொச |
| **13** | கட்டுவான - 03 | 2000 | 5544 | ச.தொ.ச. நிறுவனம் |
| **14** | கட்டுவான - 04 | 2000 | 5544 | ச.தொ.ச. நிறுவனம் |
| 15 | முருங்கன் | 9720 | 1500 | உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் |
| 16 | மன்னார் | 4356 | 450 | |
| 17 | அம்பாறை-01 | 11368 | 2125 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 18 | கெக்கிராவ - 01 | 7950 | 1275 | நெல் சந்தைப்படுத்தல் சபை |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | கெக்கிராவ - 02 | 7150 | 1145 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 20 | மகவ – 01 | 4698 | 800 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 21 | மகவ -02 | 13118 | 1300 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 22 | சேனாநாயக்க - 02 | 2461 | 396 | சுதேச மருத்துவ அமைச்சு |
| 23 | சேனாநாயக்க - 03 | 11017 | 2400 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 24 | ககந்தாவ - 01 | 3517 | 1900 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| **25** | கிங்குரக்கொட - 01 | 23550 | 4400 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| **26** | கிங்குரக்கொட - 02 | 23550 | 4400 | ச.தொ.ச. நிறுவனம் |
| **27** | மொனராகல - 01 | 22480 | 3150 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| **28** | மொனராகல - 02 | 7000 | 1250 | ச.தொ.ச. நிறுவனம் |
| | **மொத்தம்** | **342442** | **64501** | |

**02. உணவுத் திணைக்களம் பாவித்து வருகின்ற களஞ்சியசாலைகள்**


| தொ. இல் | களஞ்சியசாலையின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ள ளவு (மெ.தொ.) | தற்போது பாவித்து வருகின்ற நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01 | வெயங்கொட – 03 | 6142 | 1200 | உணவுத் திணைக்ளம் |
| 02 | வெயங்கொட - 07 | 28860 | 5400 | உணவுத் திணைக்ளம் |
| 03 | வெயங்கொட - 06 | 7568 | 1100 | உணவுத் திணைக்ளம் |
| 04 | ஒறுகொடவத்த – 08 | 16560 | 4000 | உணவுத் திணைக்ளம் |
| 05 | ஒப்பநாயக்க-01 | 7730 | 1335 | உணவுத் திணைக்ளம் |
| 06 | வெயங்கொட - 16 | 6370 | 1200 | உணவுத் திணைக்ளம் |
| 07 | ஹம்பாந்தோட்டை களஞ்சியசாலை | 14023 | 4500 | உணவுத் திணைக்ளம் |
| 08 | பதுளை – 01 | 7245 | 1380 | உணவுத் திணைக்ளம் |
| 09 | அம்பாறை – 02 | 11368 | 2125 | உணவுத் திணைக்ளம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | வெயங்கொட - 05 | 12373 | 1400 | உணவுத் திணைக்ளம் |
| 11 | சிராவஸ்திபுர – 01 | 25520 | 3575 | உணவுத் திணைக்ளம் |
| 12 | சிராவஸ்திபுர - 02 | 23930 | 3350 | உணவுத் திணைக்ளம் |
| 13 | கந்துறுவெல -01 | 13419 | 2880 | உணவுத் திணைக்ளம் |
| 14 | கந்துறுவெல -02 | 20187 | 3200 | உணவுத் திணைக்ளம் |
| 15 | வெயங்கொட - 10 | 28860 | 5400 | உணவுத் திணைக்ளம் |
| 16 | வெயங்கொட - 01 | 29040 | 5900 | உணவுத் திணைக்ளம் |
| 17 | பூஸ்ஸ-02 | 23721 | 3750 | உணவுத் திணைக்ளம் |
| 18 | வெயங்கொட - 13 | 24288 | 6800 | உணவுத் திணைக்ளம் |
| 19 | வத்தேகம் | 5120 | 1000 | உணவுத் திணைக்ளம் |
| 20 | மெத்தவத்த – 01 | 7264 | 965 | உணவுத் திணைக்ளம் |
| 21 | பூஸ்ஸ -03 | 23721 | 3750 | உணவுத் திணைக்ளம் |
| | **முழுமொத்தம்** | **343309** | **64210** | |

**03. பிரதேச செயலாளர்/மாவட்ட செயலாளரின் பொறுப்பிலுள்ள களஞ்சியசாலைகள்**

| தொ. இல் | களஞ்சியசாலையின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ள ளவு (மெ.தொ.) | வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01 | புத்தளம் – 01 | 5600 | 600 | மாவட்ட செயலகம் (புத்தளம்) |
| 02 | புத்தளம் - 02 | 9600 | 1000 | |
| 03 | நாவற்குளி (03 களஞ்சியசாலைகள்) | 43200 | 7500 | மாவட்ட செயலகம் (யாழ்ப்பாணம்) |
| 04 | புஸ்ஸ – 04 | 56784 | | கிக்கடுவ பிரதேச செயலகம் |
| 05 | புஸ்ஸ - 05 | 55770 | | |
| 06 | மெத்தவத்த – 02 | 10000 | 1870 | மாவட்ட செயலகம் (மாத்தறை) |
| 07 | வீரவில (03 களஞ்சியசாலைகள்) | 13856 | 4500 | திஸ்ஸமகாராம பிரதேச செயலகம் |
| 08 | கேகாலை - பரகம்மன 01 | 5500 | 1500 | மாவட்ட செயலகம் (கேகாலை) |
| 09 | கேகாலை - பரகம்மன 02 | 5500 | 1500 | |
| 10 | கேகாலை - பரகம்மன 03 | 3960 | | |
| 11 | கொக்கல களஞ்சியசாலை | 5000 | 925 | கபராதுவ பிரதேச செயலகம் |
| 12 | நிக்கவெரட்டிய களஞ்சியசாலை | 10496 | 4000 | நிக்கவரட்டிய பிரதேச செயலகம் |
| 13 | வவுனியா – 02 | 4165 | 165 | மாவட்ட செயலகம் (வவுனியா) |
| 14 | வவுனியா – 03 | 684 | 160 | |
| 15 | மட்டக்களப்பு – 04 | 13560 | 2800 | மாவட்ட செயலகம் (மட்டக்களப்பு) |
| 16 | வெயங்கொட -14 | 5368 | 860 | அத்தனகல்ல பிரதேச செயலகம் |
| | **முழுமொத்தம்** | **249043** | **27380** | |

## இலங்கையில் உணவுத் திணைக்களத்திற்கு உரித்தான களஞ்சியசாலைகள்



## ▪ திணைக்களத்திற்கு உரித்தான இல்லங்கள்


உணவுத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 366 இல்லங்கள் திருகோணமலையில் சீனத் துறைமுகத்தில் தான்யகமவில் அமைக்கப்பட்டுள்ளதுடன், அவ் இல்லங்கள் பின்வருமாறு பாவனைக்கு எடுக்கப்படுகின்றது.

**2018/12/31 ஆந் திகதியன்றைய இல்லங்கள் தொடர்பிலான விபரங்கள்.**

| | இல்லங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உணவுத் திணைக்கள அலுவலகம் | 01 |
| 2 | சுற்றுலா விடுதி | 01 |
| 3 | விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படவுள்ளதும் மற்றும் பழுதுபார்க்கப்படவுள்ளதுமான இல்லங்கள். | 18 |
| 4 | வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள | |
| ▪ | பிரிமா நிறுவனத்தின் ஊழியர்களுக்கு | 182 |
| ▪ | பிரத்தியேக | 01 |
| ▪ | அரச நிறுவன உத்தியோகத்தர்களுக்கு | 61 |
| ▪ | முப்படையினர் மற்றும் பொலிஸ் | 55 |
| ▪ | பாதி அரச நிறுவனங்களுக்கு | 47 |
| | **மொத்தம்** | **366** |


- **இல்ல வருமானம்**

| ஆண்டு | கிடைக்க வேண்டிய வருமானம் (ரூ) | கிடைக்கப் பெற்ற வருமானம் |
|---|---|---|
| 2017 | 5,846,234.00 | 5,734,943.27 |
| 2018 | 2,154,816.00 | 5,889,756.72 |



- **களஞ்சியசாலைகளின் வருவாய்**

| ஆண்டு | கிடைக்க வேண்டிய வருமானம் (ரூ) | கிடைக்கப் பெற்ற வருமானம் |
|---|---|---|
| 2017 | 80,705,635.64 | 101,130,285.86 |
| 2018 | 94,534,201.96 | 80,980,062.31 |



## (08) கணக்கீட்டுச் செயற்பாடு தொடர்பிலான மீளாய்வு

உணவுப் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொணடு அரச கொள்கையினை அமுலாக்குவதை முன்னணிப் பணிகளாகக் கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கும் திணைக்களத்தின் கூட்டுத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளன. அப்பயணம் மிகவும் வெற்றியளிக்கக்கூடிய முறைமையில் 2018 ஆம் ஆண்டின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினூடாக காட்டப்பட்ட சில செலவு விடயங்களின் கீழ் கோரியிருந்த ஒதுக்கீடுகள் வருடாந்த மதிப்பீட்டினூடாக வழங்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்த செலவு விடயங்கள் தொடர்பில் முகாமை செய்யக்கூடிய செலவுகளைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட கொள்முதல் திட்டம் மற்றும் அதற்கு மேலதிகமான திணைக்கள தேவைப்பாடுகளை நி.பி. 66 இன் கீழ் மாற்றுவதன் மூலம் நிறைவேற்றுவதற்கு முடிந்தமை.

### மீண்டுவரும் செலவினம்

திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் குறைந்த மற்றும் கட்டுப்பாட்டுச் செலவினக் கொள்கை 2018 ஆம் ஆண்டில் அமுற்படுத்தியதன் காரணத்தினால் வருடாந்த மதிப்பீட்டினூடாக மீண்டுவரும் செலவினங்களின் கீழ் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் வரையறையினை மீறாத வகையில் நடவடிக்கை எடுத்தல் இலகுவானதொன்று என்பதுடன், செலவுகளைக் கட்டுப்படுத்தியமையின் காரணத்தினால் சில செலவு விடயங்களின் கீழுள்ள ஒதுக்கீடுகளை மேலதிக நி.பி 66 இன் பிரகாரம் சரியான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அத்தியாவசியமான சில செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஒதுக்கீட்டு வரையறைகளைத் தாண்டாதிருப்பதற்கு பொறுப்பு நிற்றல், தேவையான அளவுக்கு ஒதுக்கீடுகளை மீளத் திருத்துவதற்குள்ள இயலுமையின் கீழ் கணக்கீட்டு சட்ட ஒழுங்குகள் மற்றும் ஆலோசனைகளைக் கடைப்பிடித்து ஆபத்துக்களை எடுப்பதற்கு திணைக்களத்திற்கு முடிந்துள்ளது.

## மூலதனச் செலவினம்

மூலதனச் செலவு விடயத்தின் கீழ் வருடாந்த மதிப்பீடுகளினூடாக வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகள், ஆகக்கூடிய வகையில் உச்ச பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

## புழக்கத்திலுள்ள கணக்குகள்

திணைக்களத்தின் புழக்கத்திலுள்ள இரண்டு கணக்குகளினுள் சமையலறை மற்றும் வெதுப்ப முற்பணக் கணக்கின் கணக்குகளைத் தீர்த்து விடுவதற்கான நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளதுடன், ஏனைய முற்பணக் கணக்கு கணக்கான உணவினைப் பங்கிடும் முற்பணக் கணக்கில் காணப்பட்ட சொத்துக்கள், தற்போது திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதால் அவை உணரப்படாததன் கீழ் இக்கணக்கின் புழக்கம் குறைந்துள்ளது. கடன் மீதிகளினை, கைவிடும் அங்கீகாரம் கிடைக்கும் வகையில் இடம்பெற்றுள்ளதுடன், செயல்நட்டத்தினைக் கைவிடுதல் 2018 ஆம் ஆண்டில் இடம்பெறவில்லை.

அரச கொள்கையின் கீழ் தற்போதைய காலத்தின் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு திணைக்களம் வருடத்தினுள் எடுத்துள்ள நடவடிக்கைகள் மிகவும் முக்கிய நிலையிலுள்ளது. அச்செயற்பாடுகளை நிறைவேற்றும்போது எழுந்துள்ள நடைமுறை நிலைமைகளின் கீழ் ஆகக்கூடிய அர்ப்பணிப்பு, வெளிப்படைத் தன்மையுடன் சகல சட்ட ஒழுங்குகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து பிரச்சினையின்றி வருடத்திற்கான கணக்குச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு முடிந்தமை.

## (09) சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள்

திணைக்களத்தில் காணப்படும் சொத்துக்கள், உணவுகளைப் பகிர்ந்தளிக்கும் முற்பணக் கணக்கின் கீழ் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன், சொத்துக்களாக உள்ளன. அச்சொத்துக்கள் அனைத்தும் திணைக்களத்தின் செயல் நடவடிக்கைகளுக்கு 2018.12.31 ஆந் திகதி வரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் 2018.12.31 ஆந் திகதி வரையில் சொத்துக்களின் பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| | **சொத்துக்கள்** | **செலவின் பெறுமதி 2018.12.31 ஆந் திகதியன்று ரூபா. சதம்** |
|---|---|---|
| **உணவுப் பங்கீடு முற்பணக் கணக்கின் கீழ்க் காணப்படும் சொத்துக்கள்.** | | |
| I. | கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள் | 64,780,643.33 |
| II. | வாகனங்கள் | 13,282,061.36 |
| III. | எந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் | 5,583,704.83 |
| IV. | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 8,428,903.40 |
| | **முழு மொத்தம்** | **92,075,312.92** |

# (10) வருவாய்களும் மற்றும் அறவீடுகளும்

**வருவாய்கள் மற்றும் அறவீடுகள்**

| | **2018.01.01 ஆந் திகதியன்று அறவிடப்பட வேண்டிய கடன் மீதி** | |
|---|---|---|
| I | களஞ்சிய வாடகை | ரூபா. 54,330,341.40 |
| II | இல்ல வாடகை | ரூபா. 3,834,492.68 |
| **மொத்தம்** | | ரூபா. **58,164,834.08** |

| | **வருடத்தினுள் அறவிடப்பட வேண்டிய வருவாய்** | |
|---|---|---|
| I | களஞ்சிய வாடகை | ரூபா. 80,980,062.31 |
| II | இல்ல வாடகை | ரூபா. 5,889,756.72 |
| **மொத்தம்** | | ரூபா. **86,869,819.03** |

| | **2018.12.31 ஆந் திகதியன்று அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவைகள்** | |
|---|---|---|
| I | களஞ்சிய வாடகை | ரூபா. 80,274,057.74 |
| II | இல்ல வாடகை | ரூபா. 4,541,415.96 |
| **மொத்தம்** | | ரூபா. **84,815,473.70** |

# (11) நிதி அறிக்கைகள்

தலைப்பு இலக்கம் : 300

அமைச்சு/திணைக்களம் : உணவு ஆணையாளர் திணைக்களம்

நிகழ்ச்சித் திட்ட இலக்கம் : 01

கருத்திட்டம் : 01

## மீண்டுவரும் செலவினங்கள்

| விபரம் | 2017 உண்மையான செலவினம் ரூ.ச. | 2018 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.ச. | 2018 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ.ச. | 2018 உண்மையான செலவினம் ரூ.ச. | 2018 மீதி ரூ.ச. |
|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 51,619,509 | 53,000,000 | 53,200,000 | 52,927,589 | 272,411 |
| பிற | 477,811,826 | 35,720,000 | 32,470,000 | 30,976,852 | 1,493,148 |
| **மொத்தம்** | **529,431,335** | **88,720,000** | **85,670,000** | **83,904,441** | **1,765,559** |

## மூலதனச் செலவினம்

| செலவு விடயம் | விபரம் | 2017 உண்மையான செலவினம் ரூ. | 2018 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. | 2018 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. | 2018 உண்மையான செலவினம் ரூ. | 2018 மீதி ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 2001 | கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள் | 176,904,303 | 98,000,000 | 128,850,000 | 128,199,551 | 650,449 |
| 2002 | பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 24,000 | 250,000 | 250,000 | 221,019 | 28,981 |
| 2003 | வாகனங்கள் | 489,245 | 600,000 | 600,000 | 587,212 | 187,212 |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபரகணங்கள் | 2,003,964 | 500,000 | 2,900,000 | 2,895,460 | 4,540 |
| 2103 | எந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் | 268,980 | 200,000 | 200,000 | 189,750 | 10,250 |
| 2401 | பயிற்சியளித்தல் மற்றும் திறன் விருத்தி | 443,735 | 400,000 | 400,000 | 399,500 | 500 |
| 2502 | உணவுத் திணைக்களத்தின் களஞ்சியசாலைகளைப் பழுதுபார்த்தல் | - | - | - | - | - |
| **மொத்தம்** | | **180,131,227** | **99,950,000** | **133,200,000** | **132,492,492** | **707,508** |

## நிதி மூலங்கள்

| விபரம் | 2017 உண்மையான செலவினம் ரூ. | 2018 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. | 2018 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. | 2018 உண்மையான செலவினம் ரூ. | 2018 மீதி ரூ. |
|---|---|---|---|---|---|
| திரண்ட நிதியம் | 253,042,562 | 188,670,000 | 218,870,000 | 214,238,699 | 4,631,301 |
| நட்டங்களைக் கைவிடுதல் | 456,520,000 | - | 2,300,000 | 2,158,234 | 141,766 |

## (12) செயற்பாட்டு முன்னேற்றம்

- **வருவாய் மேம்பாடு**

1. திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியசாலைகளினுள் திணைக்களச் செயற்பாடுகளுக்குப் பாவிக்கப்படாதுள்ள களஞ்சியசாலைகளை வெளிநிறுவனங்களுக்கு வாடகைக்கு/குத்தகைக்கு வழங்குதல் மற்றும் திணைக்களத்திற்குச் சொந்தமான இல்லங்களை வாடகைக்கு வழங்குதல் பிரதான வருவாய்க்கான முக்கிய மூலமாகவுள்ளதுடன், அவற்றினுள் றன் கொரன்ரெய்னர் ரேர்மினல் பிரத்தியேகக் கம்பனியிடமிருந்து கிடைக்கும் களஞ்சியசாலைகளுக்கான வாடகை வருவாய் மற்றும் தானயகம பிரிமா இல்லங்களின் வாடகை வருமானம் பிரதனமாகும்.

2. அதன் பிரகாரம் ரூபா. 80,980,062.31 களஞ்சிய வருமானத்தினையும் மற்றும் ரூபா. 5,889,756.72 இல்ல வருமானத்தினையும் அரச வருவாய்க்கு வரவிடுவதற்கு முடிந்துள்ளதுடன், அதனூடாக அரச வருவாய் மேம்பாட்டிற்கு பங்களிப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

3. திணைக்களத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட சமையலறை மற்றும் வெதுப்ப முற்பணக் கணக்கின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்த்தல் நிறைவு பெற்றுள்ளது.